12 .06 2026 **OS.No. 56 / 2020**

**வா.சா.1 பெயர்: பூங்கோதை க/பெ.குப்புசாமி**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணைதொடர்ச்சி:**

முந்தைய குறுக்கு விசாரணையில் தொகைகள் கொடுத்ததற்கான குறிப்பு வீட்டில் உள்ளதாகவும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறீர்களா என்றால் இல்லை. ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் வீடு மாறியதில் மேற்படி குறிப்புகள் எங்க வைத்தேன் என்று ஞாபகம் இல்லை. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான் மாரி, மங்கை, முனியம்மாள் ஆகியோர் இருந்தோம். அவர்களுடன் ஒருவர் வந்திருந்தார். வேறு நபர்கள் இல்லை. மேற்படி ஒப்பந்தம் எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் ஞானதுரை வழக்கறிஞரின் போச்சம்பள்ளி அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டதாகும். மேற்படி ஒப்பந்த பத்திரம் எப்போது ஏற்படுத்தப்பட்டது என்றால் 10.10.2017 ஆகும். எத்தனை வருடம் போட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஒரு வருடம் போடப்பட்டது. மேற்படி ஒப்பந்தத்திற்காக முத்திரைத்தாள் யார் பேரில் வாங்கப்பட்டது என்றால் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி முத்திரைத்தாள் யார் வாங்கி வந்தார்கள் என்றால் பிரதிவாதிகள் வாங்கி வந்தார்கள். மேற்படி ஒப்பந்தத்தில் எழுதப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி நான் குறிப்பிடும் ஒப்பந்த ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் 11.10.2018 தேதிக்குள் கிரையப்பத்திரம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் இல்லை என்றால் முன்பணம் இழக்க வேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அவர்கள் தான் பத்திரம் எழுதிக்கொடுக்க முன்வரவில்லை. அவ்வாறு பிரதிவாதிகள் முன்வராததால் எப்போது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 2019 வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி கிரய ஒப்பந்தம் எந்த மூல ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது என்றால் பிரதிவாதிகளின் அசல் ஆவணங்கள் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். கூட்டு பட்டாவும் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பட்டா எண் 604 படி **7** நபர்களுக்கு மேற்படி ஒப்பந்தச் சொத்து பாத்திமானது என்றால் சரிதான். பட்டா எண் 372 படி 8 நபர்களுக்கு மேற்படி ஒப்பந்தச் சொத்து பாத்திமானது என்றால் சரிதான். ஆனால் அவர்கள் அதை சரி செய்து பத்திரம் எழுதிக் கொடுப்பதாக சொன்னார்கள். மேற்படி ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திய தேதியிலேயே மூன்றாம் பிரதிவாதி முழு தொகையும் வாங்கிக்கொண்டார் என்றால் சரிதான். வழக்கு

சொத்து விவரம் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. பிரதிவாதிகளிடம் கிரைய ஆவணத்தை ஏற்படுத்துமாறு கேட்டதாக கூறுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.